மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஐ.ஏ.எஸ். பணிக்கு நேரடி நியமனம் செய்யும்பொழுது மட்டுமே தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கான ஒதுக்கீடு நிறைவேற்றப்படுகிறது. அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட அலுவலர்களை மத்திய அரசில் பணிபுரிய அனுப்பப்படும்பொழுது தனியாக ஒதுக்கீடுமுறை கடைப்பிடிக்கப்படுவதில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த வினா எண் 2, திரு. கு. ரமணி, மாண்புமிகு உணவு அமைச்சர் . . . . . (குறுக்கீடுகள்) இன்றைக்கு 30 கேள்விகள் இருக்கின்றன; முதல் கேள்விக்கே 7 நிமிடங்கள் ஆகிவிட்டன. (குறுக்கீடுகள்) கேள்வி நேரத்தில் கட்சி அடிப்படையில் வாய்ப்பு அளிப்பது கிடையாது.

கோவில்களில் நடைபெறும் திருட்டுகளை கண்டுபிடிக்க தனி போலீஸ் பிரிவு.

2—(*வினா எண். 11847) **திரு. கு. ரமணி** : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்களில் நடைபெறும் திருட்டுகளை கண்டுபிடிக்க தனி போலீஸ் பிரிவை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) கோவில்களில் நடைபெறும் திருட்டுகளைக் கண்டுபிடிக்க தனி போலீஸ் பிரிவை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்பொழுது இல்லை. இருப்பினும், கோவில் சிலைகள் திருட்டைப் பற்றி கண்காணித்து புலன் விசாரணை மேற்கொள்ள தனி காவல் பிரிவு ஒன்று குற்றப் புலனாய்வுத் துறையில் ஏற்கனவே இயங்கி வருகிறது. முக்கியமான சிலை திருட்டு வழக்குகளை புலன் விசாரித்தல், சிலை திருட்டு வழக்கு சம்பந்தப்பட்டுள்ள வேறு மாநிலத்து குற்றவாளிகளை புலன் விசாரித்தல், போன்ற பணிகளை இச் சிலை மீட்பு பிரிவு (புலனாய்வுப் பிரிவு) மேற்கொண்டு வருகின்றது.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, கோவில் சிலைகள் திருட்டைப் பற்றி கண்காணித்து புலன் விசாரணை மேற்கொள்ள தனி காவல் பிரிவு ஒன்று குற்றப் புலனாய்வுத் துறையில் ஏற்

கனவே இயங்கி வருகிறது என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால், கோவில்களிலே நடக்கிற இந்தக் குற்றங்கள் வெறும் சிலைத் திருட்டு மட்டும் அல்ல: அங்கேயிருக்கக்கூடிய பல இலட்சக் கணக்கான விலை மதிப்புள்ள ஆபரணங்களையெல்லாம் அபகரித்துக் கொண்டு செல்கின்றார்கள். கோவில்களுடைய கதவுகளை எல்லாம் உடைத்து உள்ளே திருட்டு நடைபெறு கிறது. அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடக்கும்போது, சாதாரண காவல் நிலையங்களில் அந்த மாதிரி நடவடிக்கைகளில் உடனுக் குடனே தலையிட்டு செயல்படுத்துவது சிரமம் என்பது நடை முறையில் தெரிகிறது. எனவே, மறுபடியும் பரிசீலனை செய்து இத்தகைய குற்றங்கள் நிகழும்போது நேரடியாகத் தலையிட்டு கைது செய்யவும், வழக்கு தொடரவும் அல்லது அவர்களைப் பிடிக்கவும் புலனாய்வுப் பிரிவு போல் இன்னொரு பிரிவு உண்டாக்க அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இப்பொழுதே கிரைம் பிராஞ்ச் (சி.ஐ.டி.) சில் 'ஐடல் விங்' என்று ஒன்று வைத்து, எஸ்.பி. அளவில் வைத்து, அதற்கான அதிகாரிகள் எல்லாம் நியமித்து, இதுபோன்ற கோவில் சம்பந்தப் பட்ட வழக்குகள் வருகின்றபொழுது அவர்கள் அதைப்பற்றி ஆராயவும் வழக்கு தொடரவும் ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது. மேலும் ஒரு பிரிவு ஏற்படுத்துவது என்பதை அரசு அவசிய மாகக் கருதவில்லை. அது வீண் செலவாகும்.

(முற்பகல் 10-10)

திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவில்களிலுள்ள விலையுயர்ந்த கலைப் பொக்கிஷங் களான சிலைகளையும், நகைகளையும் திருடுகிற சமுதாய விரோதிகளைக் கடுமையாகத் தண்டிக்கிற வகையில் புதிய சட்டத்தைக் கொண்டு வரவும், அப்படிப்பட்டவர்களை பாது காப்புச் சட்டப்படி கைது செய்யவும் அரசு தகுந்த நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, குற்றத்திற்கேற்ற தண்டனை வழங்கப்படும்.